පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංක : 79

ආයතනයේ නම : ආයෝජන ප්‍රවර්ධන අමාත්‍යාංශය

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ ගරු.ආයතන භාර අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம்: 79

நிறவனத்தின் பெயர்: முதலீட்டு மேம்பாட்டு அமைச்சு

பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் நிறுவனங்களிற்குப் பொறுப்பான கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

Parliamentary Series No : 79

Name of the Institution : Ministry of Investment Promotion

Submission of observations of the Hon.Minister in charge of the institutions and steps taken with regard to the reports tabled by the reports tabled by the Committee on Public Accounts in terms of Standing Order No. 119(4)

மாதிரிப்படிவ இலக்கம் 01

பாராளுமன்ற தொடர் இலக்கம்: 79

நிறுவனத்தின் பெயர்: முதலீட்டு மேம்பாட்டு அமைச்சு

முதலாவது பகுதி: 1

தொடர் இல.	குழு இனங்கண்டுள்ள குறைபாடுகள்	குறைபாடு /தற்போதைய நிலைமையை சீராக்கல் செய்வதற்காக நிறுவனம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள்
01.	ஆபத்துக்கள் பற்றிய பதிவேடு கால அடிப்படையில் பராமரிக்கப்படவில்லை.	மீளாய்வு ஆண்டினை அடுத்த ஆண்டு முதல் ஆபத்துக்கள் பற்றிய பதிவேட்டைப் பேணிவருவது ஆரம்பிக்கப்பட்டது.
02.	வருடாந்த பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	மீளாய்வு ஆண்டுக்கான பெறுகைத் திட்டம் தயார் செய்யப்பட்டிருக்காத போதிலும், அடுத்துவரும் ஆண்டுகளில் பெறுகைத் திட்டம் தயார் செய்யப்பட்டு அங்கீகரித்துக் கொண்டு இற்றைப்படுத்தப்பட்டு பேணிவரப்படுகின்றது
03.	மீளாய்வு ஆண்டுக்கு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் உரியவாறு நடாத்தப்பட்டிருக்கவில்லை.	மீளாய்வு ஆண்டில் அமைச்சில் உள்ளகக் கணக்காய்வு அலுவலர் ஒருவர் இருக்கவில்லை என்பதுடன், 2023 ஆம் ஆண்டு முதல் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு தாபிக்கப்பட்டு கணக்காய்வு முகாமைத்துவக் குழு உரியமுறையில் நடாத்தப்பட்டு வருகின்றது.
04.	2017.06.26 ஆம் திகதிய 01/2017 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையின் 7 ஆம் பந்திக்கு அமைய 2018 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் மற்றும் அகற்றல் பற்றிய தகவல்கள் கொம்ப்ட்ரொலர் நாயகம் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	மீளாய்வு ஆண்டின் பின்னரான ஆண்டுகளின் உரிய தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.
05.	2017.06.26 ஆம் திகதிய 01/2017 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையின் 13 ஆம் பந்திக்கு அமைய சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை அமுல்படுத்துவதை ஒருங்கிணைப்புச் செய்ய தகுந்த அலுவலர் ஒருவரை நியமனம் செய்து கொம்ப்ட்ரோலர் நாயகம் அலுவலகத்திற்கு அறிவிக்காமை.	மீளாய்வு ஆண்டின் பின்னரான ஆண்டில் சொத்துக்களுக்கான அலுவலர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.
06.	2020.08.28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பகுதி I இன் 11.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள காலஎல்லைக்குள் நி.பி. 756(6) இற்கமைய பொருட் கணிப்பீட்டை மேற்கொண்டு உரிய திகதிக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்கப்படாமை.	மீளாய்வு ஆண்டின் பின்னரான ஆண்டுகளில் உரிய காலஎல்லைக்குள் நி.பி. 756 (6) இற்கமைய பொருட் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டு உரிய திகதிக்குள் அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
07.	வருடாந்த பொருட் கணிப்பீட்டில் வெளிப்படுத்தப்பட்ட மிகை, குறைகள் பற்றிய சிபாரிசுகளை உரிய காலப்பகுதிக்குள் அமுல்படுத்தாமை.	மீளாய்வு ஆண்டின் பின்னரான ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பொருட் கணிப்பீட்டு அறிக்கை மூலம் வழங்கப்பட்ட சிபாரிசுகள் தொடர்பாக உரிய காலப்பகுதிக்குள் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

08.	சகல வாகனங்களினதும் உரிமையை உறுதி செய்யும் ஆவணங்கள் இல்லாமை.	சகல வாகனங்களினதும் உரிமையை அமைச்சுக்கு பொறுப்பேற்றுக் கொள்ளத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
09.	குழும ஒதுக்க வாகனங்களுக்கு நாளாந்த பயணக் குறிப்புக்கள் மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியடம் சமர்ப்பிக்கப்படாமை.	மீளாய்வு ஆண்டின் பின்னரான ஆண்டுகளில் உரிய அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.
10.	சகல வாகனங்களிலும் அரச இலட்சினையை பொறிக்கப்படாமை.	சகல வாகனங்களிலும் அரச இலட்சினையை பொறிக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
11.	அங்கீகரிக்கப்பட்ட கட்டுநிதிக் கணக்கு மீதி திறைசேரியின் பதிவேடுகளுடன் காலாண்டு அடிப்படையில் இணக்கம் செய்யப்படுகின்ற கட்டுநிதி இணக்கக் கூற்று உரிய திகதிக்கு முன்னர் திறைசேரி நடவடிக்கைகள் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்படமை..	மீளாய்வு ஆண்டின் பின்னரான ஆண்டுகளில் உரிய கட்டுநிதி இணக்கக்கூற்றுக்கள் குறித்த திகதிக்கு முன்னர் திறைசேரி நடவடிக்கைகள் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இரண்டாவது பகுதி: 2

தொடர் இல.	குழு இனங்கண்டுள்ள குறைபாடுகள்	குறைபாடு /தற்போதைய நிலைமையை சீராக்கல் செய்வதற்காக நிறுவனம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள்
01.	நிறுவனம் பற்றி பொது மக்களுக்கு அவசியமான தகவல்களை வழங்குவதற்கான வெப்தளமொன்று தயாரிக்கப்பட்டு பேணிவரப்பட்டிருக்கவில்லை.	தற்போது இணையத்தளமொன்று வடிவமைக்கப்பட்டு பேணிவரப்படுகின்றது.
02.	நிறுவனத்தில் பேணிவரப்படுகின்ற வெப்தளம் மூலம் பொது மக்களுக்கு முறைப்பாடுகள் அல்லது பாராட்டுக்களை குறிப்புப் பதிவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கவில்லை.	அமைச்சுக்கு தற்போது வெப்தளமொன்று வடிவமைக்கப்பட்டு பொது மக்களுக்குத் தேவையான தகவல்களைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், தொடர்ந்தும் அதன் மேம்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
03.	2018.01.24 ஆம் திகதிய 05/2018(1) ஆம் இலக்க சுற்றறிக்கை மூலம் திருத்தம் செய்யப்பட்ட 2008.02.06 ஆம் திகதிய 05/2008 ஆம் இலக்க பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைய பிரசைகள்/ சேவை பெறுநர் பிரகடனம் முறையாக தயார் செய்யப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.	தற்போது பிரசைகள்/ சேவை பெறுநர் பிரகடனம் முறையாக தயார் செய்யப்பட்டு அமுல்படுத்தப்பட்டு வருகின்றது.
04.	நிறுவனத்தின் பிரசைகள்/ சேவை பெறுநர் பிரகடனத்தை அமுல்படுத்துவது பற்றி கண்காணிப்புச் செய்வதற்கு அல்லது மதிப்பீடு செய்வதற்கான முறையியல் தயார் செய்யப்பட்டிருக்கவில்லை.	நிறுவனத்தின் பிரசைகள்/ சேவை பெறுநர் பிரகடனத்தை அமுல்படுத்துவது பற்றி கண்காணிப்புச் செய்வதற்கு அல்லது மதிப்பீடு செய்வதற்கான முறையியல் தயார் செய்யப்பட்டுள்ளது.
05.	2018 சனவரி 24 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைய முறையாக தயார் செய்யப்பட்ட மனிதவளத் திட்டமொன்று தயார் செய்யப்பட்டிருக்கவில்லை.	தற்போது மனிதவளத் திட்டமொன்று முறையாகத் தயார் செய்யப்பட்டு அமுல்படுத்தப்பட்டு வருகின்றது.

06.	தயார் செய்யப்பட்ட மனிதவளத் திட்டத்தின் மூலம் பதவியணியில் 50 சதவீதத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு வருடாந்தம் ஆகக் குறைந்தது 12 மணித்தியாலத்திற்குக் குறையாத பரீட்சை வாய்ப்பு உறுதி செய்யப்பட்டிருக்கவில்லை.	அரச செலவின முகாமைத்துவ சுற்றறிக்கைகளுக்கு அமைய திட்டமிடப்பட்டவாறு அலுவலர்களுக்கு பயிற்சி வாய்ப்புக்களை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
07.	ஒட்டுமொத்த பதவியணியினரையும் உள்ளடக்கியதாக செயலாற்றுகை உடன்படிக்கைகளை தயார் செய்து உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டிருக்கவில்லை.	பதவி நிலை அலுவலர்களுக்கு செயலாற்றுகை உடன்படிக்கைகளை தயார் செய்வது நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், ஏனைய அலுவலர்களுக்கான செயலாற்றுகை உடன்படிக்கைகளை தயார் செய்யப்பட்டு உடன்படிக்கைகள் செய்துகொள்ளப்பட்டு வருகின்றன.
08.	மனித வள அபிவிருத்தித் திட்டங்களைத் தயார் செய்வதற்கும் திறன் மற்றும் நிபுணத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தவும் நிறுவனத்தினுள் சிரேஷ்ட அலுவலர் ஒருவர் பெயரிடப்பட்டிருக்கவில்லை.	மனித வள அபிவிருத்தித் திட்டங்களை தயார் செய்வதற்கும், திறன் மற்றும் நிபுணத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதற்கென நிறுவனத்தினுள் சிரேஷ்ட அலுவலர் ஒருவர் பெயரிடப்பட்டுள்ளார்.
09.	திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புக்களிலிருந்து பெற்றுக் கொடுக்கப்பட்ட பயிற்சி வாய்ப்புக்களின் அளவு 50% இற்கும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டமை.	அரச செலவின முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் 3/2022 இற்கமைய திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புக்கள் அனைத்தையும் பெற்றுக் கொடுக்க முடியவில்லை என்பதுடன், தற்போது திட்டமிடப்பட்டவாறு அலுவலர்களுக்குப் பயிற்சி வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ரணில் விக்கிரமசிங்க

முதலீட்டு மேம்பாட்டு அமைச்சர்